=3484/2023

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) செயல்முறைகள்
முன்னிலை– திரு.ச.பாலமுரளி,எம்.ஏ.,

ந.க. தா3 / 8030 / 2023–5

நாள்– 28.05.2024

பொருள் பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊரக அலகு – தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் தேர்வாணையம் – ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளின் தொகுதி IV –இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் போட்டித்தேர்வின் மூலம் பணிநாடுநர்கள் தேர்வு செய்யப்பட்டது – பணிநியமனம் அளிக்கப்பட்டது–பணியில் சேர்ந்துகொண்டது – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்தல் மற்றும் தகுதிகாண்பருவம் துவக்குதல் – ஆணை வெளியிடுதல்.

மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம்
06 JUN 2024
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

பார்வை

1 செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண் 1867/PSD–1/ 2023, நாள் 17.08.2023.

2 திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.தா3/8030/2023–6, நாள்.20.09.2023.

3 திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கடிதம் ந.க.தா3/8030/2023, நாள்.03.01.2024.

4 உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி கடிதம் ந.க.எண்.06/அ4/2023, நாள் 04.04.2024.

5 இதர தொடர்புடைய ஆவணங்கள்.

–..–

உத்தரவு–

பார்வை ஒன்றில் காணுமாறு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வின் தொகுதி IV–ல் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின்கீழ் அடங்கிய இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு 24.07.2022 மு.ப. அன்று நடத்தப்பட்ட போட்டித் தேர்வின்வழி தெரிவு செய்யப்பட்டதன்பேரில், மேலே பார்வை –2–இல் காணுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊரக அலகில், தற்காலிக பணியமர்வு செய்யப்பட்ட கீழ்காணும் இளநிலை உதவியாளருக்கு பின்வரும் நிபந்தனைக்குட்பட்டவருக்கு எதிரே கலம் (4)–,ல் கண்டுள்ள நாளில் அவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் வரன்முறை செய்தும், அன்றைய நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணி பத்திகளின் விதி 32(a)(i)–இன்படி, தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் ஈராண்டு கால தகுதிகாண்பருவத்தினை துவக்கியும் இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த தேதி | பணிவரன்முறை செய்து தகுதிகாண்பருவம், துவக்கப்பருவம், நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு.M.ஸ்டீபன் ராஜ், ஊர் நல அலுவலர்-நிலை 2, ஊராட்சி ஒன்றியம், மருங்காபுரி. | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

(த.பி.பா...)

\\192.168.1.5\e\r3\proceedings.docx

நிபந்தனை:

இவ்வாணையானது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வின் தொகுதி நான்கில் அடங்கிய தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின்கீழ் அடங்கிய தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின்கீழ் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநாடுநர்கள் தெரிவு தொடர்பாக மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளில் பிறப்பிக்கப்படும் தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

**"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination – IV (Group IV)".**

2) இவரது பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றின் மெய்த்தன்மை அறிக்கை பார்வை 4–இல் காணும் கடிதவழி வரப்பெற்றுள்ளதனைத் தொடர்ந்து, இப்பணிவரன்முறை ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3) இவர் தனது தகுதிகாண்பருவ காலத்திற்குள்ளாக அரசாணை (நிலை) எண்.33, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 02.03.2017 இல் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பின்வரும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சிபெற வேண்டும்.

| வ. எண் | தாள் குறியீடு | தேர்வின் பெயர் |
|---|---|---|
| 1. | 008 | Department Test for the staff of Rural Development and Panchayatraj department - Tamilnadu Panchayat Act, 1994 & Rules and Constitution of India. |
| 2. | 166 | The Panchayat Development Account Test |
| 3. | 010 | Department Test for the staff of Rural Development and Panchayatraj Departmentnt- Scheme Administration. |
| 4. | 172 | The Tamilnadu Government Office Mannual Test. |

ஒம்/– ச.பாலமுரளி,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(வளர்ச்சி),
திருச்சிராப்பள்ளி

//உத்தரவின்படி//

28/5/2024
அலுவலக மேலாளர் (வளர்ச்சி).

பெறுநர்– திரு.M.ஸ்டீபன் ராஜ்,
ஊர் நல அலுவலர் நிலை 2,
ஊராட்சி ஒன்றியம், மருங்காபுரி.
28/5/24
– உரிய வழியாக.

நகல் வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ/கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம், மருங்காபுரி.

நகல் தா3 இருப்பு கோப்புக்கு.

\\192.168.1.5\e\r3\proceedings.docx

மே.கு.ந.க.எண் : அ1/3489/2023 | ஊராட்சி ஒன்றியம்
நாள் : 05.07.2024 | மருங்காபுரி

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.தா3/8030/2023-5, நாள் : 28.05.2024 - தொடர்புடைய அலுவலருக்கு சார்வு செய்யப்படுகிறது.

5/7/24

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம், மருங்காபுரி

பெறுநர்

திரு. எம்.ஸ்டீபன்ராஜ்,
ஊர்நல அலுவலர் நிலை-2,
ஊராட்சி ஒன்றியம்,
மருங்காபுரி.

05/07/2024